**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.</u>**

முன்னிலை : திரு.கோ. விஜயகுமார், B.Sc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 8ம் நாள் திங்கட்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், வைகாசி மாதம் 25ம் நாள்)

**<u>சுருக்கு வழக்கு எண்.120/2024</u>**
**<u>CNR No.TNED23-001023-2024</u>**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
மொடக்குறிச்சி காவல் நிலையம்,
குற்ற எண்.39/2023 .. குற்றமுறையீட்டாளர்.

//எதிர்//

சுபாஷ் (20)
த/பெ.காளியப்பன்,
19 காமராஜர் வீதி,
மேட்டுர்,
காட்டுப்பாளையம்,
மொடக்குறிச்சி,
ஈரோடு மாவட்டம். ..எதிரி.

| **வரிசை எண்** | **விளக்கம்** | **விவரங்கள்** | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 08.03.2023 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 09.03.2023 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |

<table>
<tr><td></td><td>மற்றும் நாள்</td><td colspan="2">14.03.2023</td><td>காவல் நிலைய பிணையில் சென்ற நாள் 14.03.2023</td></tr>
<tr><td>4.</td><td>குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">17.04.2023</td></tr>
<tr><td>5.</td><td>குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">12.09.2025</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">--</td></tr>
<tr><td rowspan="7">7.</td><td rowspan="7">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>27.01.2026</td><td>27.01.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>27.01.2026</td><td>27.01.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>27.01.2026</td><td>27.01.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>05.01.2026</td><td>05.01.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>07.05.2026</td><td>07.05.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>12.05.2026</td><td>12.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள்</td><td colspan="3">14.05.2026</td></tr>
<tr><td rowspan="2">9.</td><td rowspan="2">எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்</td><td colspan="2">பிடியாணை வழங்கப்பட்ட நாள்</td><td>பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள்</td></tr>
<tr><td colspan="2">– இல்லை –</td><td>– இல்லை –</td></tr>
<tr><td>10.</td><td>வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள்</td><td colspan="3">19.05.2026</td></tr>
<tr><td>11.</td><td>தீர்ப்பு பகரப்பட்ட நாள்</td><td colspan="3">08.06.2026</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 13.09.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு எஸ்டிசி எண்.120/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் 13.09.2026 ம் தேதி

இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.மனோகரன் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்

## தீ ர் ப் பு ரை

மொடக்குறிச்சி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 338ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம் :–**

கடந்த 8.3.2023தேதி காலை 10.15 மணிக்கு மொடக்குறிச்சி காவல்நிலைய சரகம் ஈரோடு – முத்தூர் மெயின் ரோடு நஞ்சை ஊத்துக்குளி ஸ்ரீ பாலமுருகன் ஹோட்டல் முன்பு சாட்சி.2 முருகன் என்பர் மேற்படி ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து தனது இருசக்கர வாகனம்TN –33 –2999 Honda Shine – ல் மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி புறப்பட்டபோது அவருக்கு பின்னால் வந்த எதிரியாகிய நீர் TN–33–BW–4711 என்ற எண்ணுள்ள பல்சர் இருசக்கர வண்டியை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து சாட்சி.2ன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும், மேலும் மேற்படி விபத்தில் மேற்படி எதிரி இருசக்கரவாகனத்தை சாட்சி.2 முருகன் மீது மோதி சாட்சி.2க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் எதிரி மீது இதச பிரிவு 279, 338 பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இதச பிரிவு 279, 338ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், குவிமுச பிரிவு 207வது பிரிவின் படி உள்ளதுமான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது கேள்விகள் கேட்க போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது இதச பிரிவு 279, 338ன் கீழ் குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் பின்வருமாறு:-</u>

(I) அ.சா.1 திருமதி. சாமுண்டீஸ்வரி தனது சாட்சியத்தில் கடந்த 08.03.2022 ம் தேதி எனது கணவர் சென்டரிங் வேலைக்கு காலை 6.00 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றதாகவும் காலை 10.45 மணியளவில் தனது கணவருடன் வேலை செய்த சுரேஷ் என்பவர் தனக்கு போன் செய்து தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் தன்னை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு வருமாறும் சொன்னார். நான் அங்கு போய் பார்த்தபோது தனது கணவருக்கு வலதுகாலில் பலத்த காயம் ஏற்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாகவும், வலது கையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது தான் அங்கிருந்த சுரேஷிடம் விசாரித்த போது தனது கணவரும் அவரும் நஞ்சை ஊத்துக்குளியில் பாலமுருகன் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு வெளியே வந்து தனது கணவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் எடுத்தபோது பின்னால் வேகமாக வந்த பல்சர் பைக்கை சுபாஷ் என்பவர் ஓட்டி வந்து தன் கணவர் மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறியதாகவும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மணியன் மருத்துவமனைக்கு அழைத்து சென்று தனது கணவருக்கு அறுவை சிகிச்சை செய்து

பிளேட் வைத்ததாகவும், விபத்து சம்பந்தமாக மொடக்குறிச்சி போலீஸார் மணியன் மருத்துவமனைக்கு வந்த தன்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், 8 நாட்கள் எனது கணவர் சிகிச்சையில் இருந்ததாகவும், இது சம்பந்தமாக போலீஸார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.முருகன் தனது சாட்சியத்தில் தான் தற்போது ஈரோடு பெரும்பள்ளம் ஓடையில் அருகே குடியிருந்து சென்டரிங் வேலை செய்து வருவதாகவும், கடந்த 08.03.2023 ம் தேதி காலை 6.00 மணிக்கு எனது இருசக்கர வாகனமான TN 33 BR 2999 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்று நஞ்சை ஊத்துக்குளியில் உள்ள ஹோட்டலில் காலை டிபன் சாப்பிடுவதற்காக சென்றதாகவும், தன்னுடன் வேலை செய்த சுரேஷ், ராஜேஸ்–ம் தனக்கு முன்னால் சென்று சாப்பிட்டு கொண்டு இருந்ததாகவும், தான் சாப்பிட்டு விட்டு தனது இருசக்கர வாகனத்தை எடுத்த போது சின்னிம்பாளைத்தில் இருந்து வேகமாக வந்த இருசக்கர வாகனம் தன் மீது வந்து மோதிவிட்டதாகவும், அதில் தனக்கு வலதுகால் உடைந்து, வலது கையிலும் காயம் ஏற்பட்டதாகவும் அருகில் இருந்த சுரேஷ்ம், ராஜேஸ்ம் ஆம்புலன்ஸ்–க்கு போன் செய்து தன்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், சுரேஷ் தன்னுடன் வந்தார். தகவல் தெரிந்து எனது மனைவியும் அரசு மருத்துவமனைக்கு வந்தார். மேல்சிகிச்சைக்காக தனது மனைவி மணியன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் தன் மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் தனக்கு அடையாளம் தெரியும், தனக்கு வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு பிளேட் வைத்தார்கள் என்றும் வலது கையில் மாவு கட்டு போட்டு 8 நாட்கள் சிகிச்சையிலிருந்ததாகக் கூறியுள்ளார்.

(iii) அ.சா.3 திரு.ராஜேஸ் தனது சாட்சியத்தில் கடந்த 08.03.2023 ஆம் தேதி காலை 6 மணிக்கு தானும் தன்னுடன் முருகன், சுரேஷ் என்பவரும் சென்ட்ரிங் வேலைக்காக ஊத்துக்குளிக்கு வந்திருந்ததாகவும், காலை 9 மணியளவில் சாப்பிடுவதற்காக மொடக்குறிச்சி ரோட்டில் உள்ள பாலமுருகன் மெஸ்ஸில் சாப்பிட சென்று சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் சுரேஷ் அமர்ந்தும் மற்றொரு இரு சக்கர வாகனத்தை முருகன் எடுத்துக் கொண்டும் ஈரோடு ரோட்டில் தெற்கு நோக்கி சென்ற போது ஈரோடு ரோட்டில் இருந்து மொடக்குறிச்சி நோக்கி பல்சர் பைக் அதனை ஓட்டுனர் அதிவேகமாக ஓட்டி வந்து முருகன் வந்த பைக்கின் மீது மோதி முருகன் ரோட்டின் வலதுபுறமாக கீழே விழுந்து அவருடைய பைக் ரோட்டின் இடதுபுறமாக சென்று விழுந்ததாகவும், முருகனுக்கு வலதுகால் ஒடிந்து, வலதுபுற தோள்பட்டையிலும் அவருக்கு அடிபட்டதாகவும், தான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அடிபட்டவரை அவருடைய மனைவிக்கு தகவல் சொல்லிவிட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், காவல் ஆய்வாளரும் உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றும், அவர் வந்து 108 ஆம்புலன்ஸில் முருகனை ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாகவும், போலிசார் மருத்துவமனை வந்து விசாரித்ததாகவும் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் தன்னால் அடையாளம் சொல்ல முடியும் பெயர் சுபாஷ் அவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் 47 11 ஆகும் பல்சர் பைக் என்றும்,முருகன் ஈரோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு பின்பு தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டதாகக் சாட்சியமளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு.செல்வக்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 08.03.2023 ம் தேதி காலையில் தங்கள் ஹோட்டல் முன்பு 2 இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது. அதில் ஒரு வாகனத்தில் வந்த நபருக்கு காலில் அடிபட்டு கால் முறிந்து விட்டது என்றும் அவரை ஆம்புலன்ஸ்-ல் ஏற்றி தாங்கள் மருத்தவமனைக்கு அனுப்பி

வைத்ததாகவும், இந்த விபத்து சம்பந்தமாக மறுநாள் காலை 11.30 மணியளவில் மொடக்குறிச்சி போலீஸார் தான் வேலை செய்யும் கடைக்கு முன்பாக வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து தயார் செய்ததாகவும் அதில் தானும், ராமசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 தன்னுடையது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு. சுரேஷ் தனது சாட்சியத்தில் கடந்த 08.03.2023ம் தேதியன்று காலை 6.00 மணியளவில் நானும், முருகன், ராஜேஸ் ஆகியோர் ஊத்துக்குளிக்கு அருகில் உள்ள ஒரு கட்டிடத்திற்கு வேலை செய்துவதற்காக வந்து வேலை செய்து விட்டு காலை 9.30 மணியளவில் நஞ்சை ஊத்துக்குளியில் ஈரோடு டு முத்தூர் மெயின் ரோட்டில் உள்ள பாலமுருகன் ஹோட்டலில் சாப்பிட வந்ததாகவும், சாப்பிட்டு விட்டு ராஜேஸ் வாகனத்தை ஓட்ட தான் பின்னால் அமர்ந்து ஒரு வாகனத்திலும், மற்றொரு வாகனத்தில் முருகன் வாகனத்தை எடுத்துக் கொண்டு ஹோட்டலில் இருந்து ரோட்டிற்கு வந்து ஈரோட்டிற்கு செல்ல திரும்பிய போது ஈரோட்டில் இருந்து சுபாஷ் என்பவர் பல்சர் பைக்கில் அதிவேகமாக வந்து முருகன் மீது மோதிவிட்டதாகவும், வாகனம் மோதியவுடன் முருகனுக்கு கால் முறிந்துவிட்டது. உடனே 108 ஆம்புலன்ஸ்–க்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் முருகனை ஏற்றி ஈரோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய பல்சர் பைக்கை ஓட்டி வந்த நபர். பின்பு தனியார் மருத்துவமனையில் முருகன் சிகிச்சை எடுத்து வந்தார் என்றும் சாட்சியமளித்தள்ளார்.

(vi) அ.சா.6 திரு.பிரபாகரன் தனது சாட்சியத்தில் தான் நான் 2023ம் வருடம் மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டதாகவும், கடந்த 09.03.2023 ம் தேதி நான் மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது ஈரோடு மணியன் மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற முருகன் என்பவரின் RTI இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த முருகன் என்பவர் மயக்கநிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக

இருந்து அவரது மனைவி சாமுண்டீஸ்வரியை விசாரித்து பதிவு செய்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.39/2023 சட்டபிரிவுகள் 278, 337 இதச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கு தான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தின் சாட்சிகள் ராமசாமி, செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டும் பார்வை மகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்ததாகவும், பின்பு சாட்சிகள் சாமுண்டீஸ்வரி, முருகன், ராஜேஸ், சுரேஷ் ராமசாமி செல்வகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றே எதிரி வாகனம் TN 33 BW 4711 என்ற பல்சர் இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்தேன். 30.03.2023 ம் தேதி காயம்பட்ட நபர் ஓட்டி சென்ற TN 33 BR 2999 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்ததாகவும், மருத்துவர் செந்தில்குமரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 பெற்றதாகவும் மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில் சட்ட பிரிவுகளை 279, 337 இதச பிரிவில் இருந்து 279,338 ஆக இதச பிரிவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து இருசக்கர வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.8, 9 பெற்றும் பின்பு தனது புலன்விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது வழக்கின் புலன் விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகச் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதாகவும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறியபோதிலும் போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

8. **<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :-**

அரசு தரப்பில் எதிரி மீது இதச சட்டப்பிரிவுகள் 279, 338 ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்?

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்களின் சாட்சியங்கள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் மூலமாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் விபத்தில் அடிபட்ட நபருடன் சென்ற நபர்கள் என்றும், இவ்வழக்கில் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலிருந்த நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், எனவே விபத்தானது எதிரியின் கவனக் குறைவால் ஏற்படவில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கில் விடுதலை செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

11. இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் அ.சா.1, புகார்தாரராகவும், அ.சா.2 விபத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாகவும், அ.சா.3 மற்றும் அ.சா.5 விபத்தை கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.4 பார்வை மகஜர் சாட்சி ஆகவும், வழக்கை புலன்விசாரணை

செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. <u>தீர்வு</u>

அ.சா. 1 சாமூண்டீஸ்வரி தனது சாட்சியத்தில் 8.3.2022ம் தேதி காலை 6.00 மணிக்கு தனது கணவர் வேலைக்கு புறப்பட்டுச் சென்றதாகவும் 10.45 மணியளவில் கணவருடன் வேலை செய்த சுரேஷ் என்பவர் தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு பலத்த காயம் ஏற்பட்டு வலது காலில் எலும்பு முறிவும் வலது கையில் எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளது என்றும், பாலமுருகன் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்த தனது கணவர் இருசக்கர வாகனத்தை எடுத்தபோது சுபாஷ் என்பவர் பல்சர் பைக்கை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாக சொன்னதாகவும், தனது கணவரை மேல் சிகிச்சைக்காக ஈரோடு மணியன் மருத்துவமனைஅழைத்து வந்து சேர்த்ததாகவும், மருத்துவமனையில் போலிசார் புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், ஈரோடு அரசு மருத்துவமனையில் தனது கணவரைப் பார்த்தபோது மயக்க நிலையில் இருந்தார் என்றும், மொடக்குறிச்சி காவல்நிலையப் போலிசார் வந்து விசாரித்ததாகவும், தனது கணவரை சுரேஷ் என்பவர் உடன் பணிபுரியும் நபர் தான் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாகவும், சம்பவ இடம் குறித்து தெரியவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட முருகன் என்பவர் தனதுசாட்சியத்தில் நஞ்சை ஊத்துக்குளியில் உள்ள ஹோட்டலில் 10.45 மணிக்கு சாப்பிடச் சென்றதாகவும், அப்போது அ.சா.2க்கு முன்பே சுரேஷ் மற்றும் ராஜேஷ் சாப்பிட்டுக் கொண்டிருந் ததாகவும், **இருசக்கர வாகனத்தை எடுத்தபோது சின்னியம் பாளையத்திலிருந்து வேகமாக வந்த இருசக்கர வாகனம் மோதியதாகவும், வலது கால் உடைந்து விட்டதாகவும், வலது கையில் காயம் ஏற்பட்டதாகவும், சுரேஷ் தன்னுடன் வந்ததாகவும் மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் இந்த வழக்கின் எதிரி என்றும் ஹோட்டலில் இருந்து சின்னியம்பாளையத்தை நோக்கி வடக்கு பார்த்தவாறு பைக்கை எடுத்ததாகவும்**

**தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இருசக்கர வாகனம் தனது வண்டியில் மோதியதால் கீழே விழுந்துவிட்டதாகவும்** சாட்சியமளித்துள்ளார். அ.சா.2ன் பைக்கின் பின்புறம் மோதிய வண்டியின் பதிவு எண் என்றும், எந்த பைக் மோதியது என்றும், வண்டியை ஓட்டிவந்தவர் யார் என்று தெரியாது என்றும், தற்போது தான் நீதிமன்றத்தில் எதிரியைப் பார்த்தாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14 அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட ராஜேஷ் தனது சாட்சியத்தில் 08.03.2023ம் தேதி காலை 9.00 மணியளவில் பாலமுருகன் மெஸ்சில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்து பைக்கை எடுத்துக்கொண்டு ஈரோடு ரோட்டில் தெற்கு நோக்கிச் சென்றபோது ஈரோட்டிலிருந்து மொடக்குறிச்சி நோக்கி ஒரு பல்சர் பைக் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டிவந்து முருகன் வந்த பைக்கின் மீது மோதி முருகன் வலதுபுறமாக கீழே விழுந்துவிட்டார் என்றும், பைக் ரோட்டின் இடதுபுறமாக விழுந்தது என்றும், அப்போது முருகனுக்கு வலது கால் முறிந்துவிட்டது, வலது கை தோள்பட்டையிலும் அடிபட்டது என்றும், முருகன் மனைவிக்கு தகவல் சொல்லிவிட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சேர்த்தாகவும், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் சாமிநாதபுரத்தை சேர்ந்த சுபாஷ் என்றும், மேற்படி நபரைப் பார்த்தால் தனக்கு அடையாளம் தெரியும் என்று சாட்சியமளித்துள்ளார். ஹோட்டலில் இருந்து முருகன் 3 அடி செல்வதற்குள் விபத்து நடந்தது என்றும், **இந்த வழக்கின் எதிரி அன்றைய தினம் ரோட்டிற்கு இடதுபுறமாக மெதுவாகத்தான் வந்துகொண்டிருந்தார் என்றும், முருகன் தான் இருசக்கர வாகனம் வந்ததைக் கவனிக்காமல் திடீரென ரோட்டின் குறுக்கே வந்து விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறுவது தவறானது என்று சாட்சியமளித்துள்ளார்.**

15. அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட செல்வக்குமார் என்பவர் தனது சாட்சியத்தில் 8.3.2023ம் தேதி காலை ஹோட்டல் முன்பு இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக மறுநாள் காலை 11.30 மணிக்கு போலிசார் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது கையெழுத்து செய்ததாகக்

சாட்சியமளித்துள்ளார். அதே போல் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட சுரேஷ் என்பவர் தனது சாட்சியத்தில்அ.சா.3 ராஜேஷ் வாகனத்தில் தான் பின்னால் உட்கார்ந்து சென்றதாகவும், முருகன் ஒரு பைக்கில் வந்ததாகவும், ஹோட்டலில் இருந்து ரோட்டுக்கு வந்து ஈரோட்டிற்கு செல்லத் திரும்பியபோது சுபாஷ் என்பவர் பல்சர் பைக்கில் அதிவேகமாக வந்து முருகன் மீது மோதியதாகவும், வாகனம் மோதியதில் முருகனுக்கு கால் முறிந்துவிட்டது என்றும், ஆம்புலன்ஸ் மூலம் முருகனை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்து நடந்த போது 20 அடி தூரம் சென்றதாகவும், தங்களது வாகனத்தை முந்திச் சென்று விபத்து ஏற்படவில்லை என்றும், எதிரே வந்த வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு திரும்பி பார்த்ததாகவும், **முருகன் வாகனம் ரோட்டைக் கடக்கும்போது பல்சர் வாகனம் முருகன் வாகனத்தின் மத்திய பகுதியில் மோதியதாகச்** சாட்சியமளித்துள்ளார்.

16. அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் பிரபாகரன் தனது சாட்சியத்தில் முருகனின் மனைவியிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி காயச்சான்றிதழ் பெற்று சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் முருகன் ஹோட்டலில் இருந்து சாப்பிட்டுவிட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும்போது இந்த வழக்கு சம்பவம் நடந்தது என்றும், தென்வடல்ரோட்டிற்கு இடதுபுறமாகத்தான் நடந்தது என்றும், மையப்பகுதி என்று சொல்வது தவறு என்றும், முருகனின் இருசக்கர வாகனத்திற்கு முன்பகுதியும், பின்புறமும் சேதாரம் ஏற்படவில்லை என்றும், இரண்டு பக்கங்களிலும் சேதாரம் ஏற்படவில்லை என்றும், இந்த விபத்திற்கு எதிரியின் அஜாக்கிரதை, கவனக்குறைவு தான் காரணம் என்று சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தையும்விபத்தில் சம்மந்தப் பட்ட வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளரின்அறிக்கையையும் பார்க்கும்போது முருகன் ஓட்டி வந்த வாகனத்தின்இடது புற பம்பர் சேதாரம் ஆகியும் வலதுபுற பின்பக்க கண்ணாடி உடைந்தும் முகப்பு விளக்கு இடதுபுறம் கீரல்கள் ஏற்பட்டும் இடதுபுற வாகனத்தின் பூட்டு உடைந்தும் இருந்ததாகக்

குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் எதியின் வாகனத்தின் முன்புற முகப்பு விளக்கு, முன்புற பதிவு எண் பலகை வளைந்தும், இடது புறப்பக்கம் கிரல்விழுந்தும், வலது புற பம்பர் வளைந்து காணப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்க்கும்போது விபத்தைக் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்தின் படியும், எதிரி தரப்பில் எதிரி பல்சர் வாகனத்தை மேற்படி சாலையின் இடதுபுறமாக ஓட்டி வந்ததை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மேற்படி விபத்துக்கு எதிரி காரணமாக இருந்தது தெரியவந்துள்ள நிலையில் அதை எதிரி தரப்பில் மறுக்காத நிலையில், எதிரி ஓட்டிவந்த வாகனத்திற்கு வாகன காப்பீட்டு சான்று இல்லாத நிலையில் மேற்படி விபத்திற்கு எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணம் என தெரியவந்துள்ளது. எனவே மேற்படி எதிரி இதச பிரிவு 279, 338 படி தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. முடிவாக எதிரி இதச பிரிவு 279, 338ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிரியின் வயது, முன் வழக்கு எதுவும் இல்லாததைக் கருத்திற்கொண்டும், வழக்கின் சூழ்நிலை தன்மையை கருத்திற்கொண்டும் எதிரிக்கு குறைந்த பட்ச தண்டனையாக அபராதம் மட்டும் விதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதி எதிரிக்கு இதச பிரிவு 279ன் படியான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- கட்டத் தவறும் பட்சத்தில் 1 மாதம் சாதாரண சிறைதண்டனையும் இதச பிரிவு 338ன் படியான குற்றத்திற்கு அபராதம் ரூ.1000/- கட்டத் தவறும் பட்சத்தில் 3 மாதம் சாதாரண சிறைதண்டனையும் விதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.அபராதம் வசூலிக்கப்பட்டது.

18. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு, ஆஜர்படுத்தப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைதிருத்தம் செய்து, இன்று 2026ம் ஆண்டு ஜீன் மாதம் 8ம் தேதி என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.08 17:42:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி வட்டம்.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. சாமுண்டீஸ்வரி – புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. முருகன் |
| அ.சா.3 | திரு. ராஜேஷ் |
| அ.சா.4 | திரு. செல்வக்குமார் |
| அ.சா.5 | திரு. சுரேஷ் |
| அ.சா.6 | திரு. பிரபாகரன் – உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 09.03.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 | 09.03.2023 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | 09.03.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | 09.03.2023 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | 08.03.2023 | விபத்து பதிவேட்டு நகல் |
| அ.த.சா.ஆ.6 | 08.03.2023 | காயச்சான்றிதழ் |
| அஅ.சா.ஆ.7 | 09.03.2023 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 | 21.03.2023 | TN 33 பி டபிள்யூ 4711 2927 ன் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.த.சா.ஆ.9 | 21.03.2023 | TN பி.ஆர் 2999 ன் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்</u>:–**

**– இல்லை –**

**<u>பிற்சேர்க்கை</u>** :–

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2) வழக்கின் விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) வழக்கின் முடிவு அரசு தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.08 17:42:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி வட்டம்